# கிளிநொச்சி மாவட்டத்தின் கௌதாரி முனையில் சூழல்சார் சுற்றுலாத்துறையை விருத்தி செய்வதற்கான உள்ளார்ந்த வள வாய்ப்புக்கள்

வைத்தியரட்ணம் பத்மானந்தகுமார்
நடராஜபிள்ளை தசரதன்

## ஆய்வுச் சுருக்கம்

ஆசியாக் கண்டத்தில் தென்னாசியாவிலேயே அதிகளவிலான சுற்றுலா மையங்கள் காணப்படுகின்றன. எனினும் ஆசியாவின் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் சுற்றுலாத்துறையானது சுற்றுலா முகவர்களினாலேயே விருத்தி செய்யப்பட்டுள்ளது. இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்தியில் சுற்றுலாத்துறையானது சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துமென இலங்கையில் சுற்றுலாத்துறை தொடர்பாக ஆய்வினை மேற்கொண்ட ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். நடைமுறையில் காணப்படும் சுற்றுலாத்துறையானது சூழல்தொகுதி, சுற்றுலாமையத்தின் கலாசார அடையாளம், தூய்மையான கடல் மற்றும் கடற்கரை, அதிகளவான இயற்கை மற்றும் கலாசார விடயங்கள், விடுமுறை, சேவைகளின் தராதரம் போன்ற பல்வேறு விடயங்களில் முக்கிய கவனம் செலுத்துகின்றது. இலங்கையின் வட மாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள கௌதாரி முனையானது சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய பல அம்சங்களைக் கொண்டுள்ளது. எனினும் கௌதாரி முனையில் சூழல்சார் சுற்றுலாத் துறையை விருத்தி செய்வதற்கு ஏதுவாகக் காணப்படும் வள வாய்ப்புக்கள் தொடர்பாக மிகக் குறைந்தளவான ஆய்வுகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது இப் பகுதியில் சுற்றுலாத்துறையினை அபிவிருத்தி செய்வதில் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தினைச் செலுத்துகின்றது. இவ் ஆய்வானது கிளிநொச்சி மாவட்டத்தின் கௌதாரி முனையில் சூழல்சார் சுற்றுலாத்துறையை விருத்தி செய்வதற்கு ஏதுவாகக் காணப்படும் உள்ளார்ந்த வள வாய்ப்புக்கள் தொடர்பாகவும், அங்கு காணப்படும் சூழல்சார் சுற்றுலாத் துறையின் தற்போதைய நிலை தொடர்பாகவும் வெளிப்படுதுவதனை நோக்கங்களாகக் கொண்டுள்ளது. இவ் ஆய்வானது முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். குறித்த இவ் ஆய்விற்கான தரவுகளையும் தகவல்களையும் பெற்றுக்கொள்வதற்கான நபர்கள் நோக்க அடிப்படையிலான மாதிரி முறையில் தெரிவு செய்யப்பட்டனர். சேகரிக்கப்பட்ட தரவுகள் மற்றும் தகவல்கள் பண்பு ரீதியாக பகுப்பாய்வு செய்யப்பட்டு விவரண ரீதியாக கொடுக்கப்படுள்ளது. இவ் ஆய்வின் பிரகாரம் கௌதாரிமுனை அதன் புவியியல் ரீதியான அமைவிடம் காரணமாக சுற்றுலாப் பயணிகளை கவரக்கூடிய பல்வேறு வளங்களைக் கொண்டுள்ளதென்பதனை அறியமுடிகின்றது. எனினும் இப் பிரதேசமானது உள்நாட்டு மற்றும் சர்வதேச சுற்றுலாப்பயணிகள் மத்தியில் அறியப்பட்ட ஒரு பிரதேசமாகக் காணப்படாமையால் இங்கு சூழல்சார் சுற்றுலாத்துறை விருத்தியை மேற்கொள்வதற்கு ஏதுவாய் காணப்படும் வளங்களை பயன்படுத்தி வருவாயை உருவாக்குவது மிகக் கடினமானதாகவே உள்ளது. மேலும் குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் உரிய முறையில் விருத்தி செய்யப்படாமையினாலும் சூழல்சார் சுற்றுலாத்துறை விருத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

பிராந்தியங்களுடன் ஒப்பிடும் போது ஆசிய பசுபிக் பிராந்தியத்திலேயே சுற்றுலாத்துறையானது 8.4 வீதத்தினால் அதிகரித்துள்ளது (Sri Lanka Tourism Development Authority, 2016). இலங்கையைப் பொறுத்தவரையில் 2016 ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறையானது 14.2% அந்நியச்செலாவணியை ஈட்டித்தந்துள்ளது. இது 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 18% உயர்வாகும். 2009 ஆம் ஆண்டு உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் 2016 ஆம் ஆண்டே இலங்கைக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருந்தனர் (Tourism Development Authority, 2016).

இலங்கை சுற்றுலாத் துறை வளர்ச்சியின் அடிப்படைகளாக கலாசார மையங்கள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், இயற்கையான பகுதிகள் போன்றன காணப்படுகின்றன. 2020 ஆம் ஆண்டளவில் இலங்கையை ஆசியாவின் மிகச் சிறந்த சுற்றுலா மையமாக மாற்றுவதே இலங்கை சுற்றுலாத் துறை அபிவிருத்தி அதிகார சபையின் முக்கிய நோக்காகும். இத்தகைய இலக்கை அடைவதற்கு இலங்கைச் சுற்றுலாத் துறை அபிவிருத்தி அதிகார சபையானது உலக சுற்றுலா துறை நிறுவனத்தின் உதவியுடன் 2011-2020 வரைக்குமான "பாரிய சுற்றுலா அபிவிருத்தி திட்டம்" ஒன்றினை உருவாக்கியுள்ளது. இலங்கையில் சுற்றுலாத் துறையை விருத்தி செய்வதற்கு ஏதுவாய் பல்வேறு வளங்கள் காணப்பட்ட போதும் ஏனைய ஆசிய நாடுகளுடன் போட்டியிடும் அளவிற்கு சுற்றுலாத் துறை இலங்கையில் விருத்தி செய்யப்படவில்லை. சுற்றுலாத் துறையை விருத்தி செய்வதற்கு சுற்றுலாத் துறைக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதும் புதிய சுற்றுலா இடங்களை கண்டறிவதும் மிக முக்கியமானதாகும். எனினும், இலங்கையில் சுற்றுலாத் துறையை விருத்தி செய்யக் கூடிய வளங்களைக் கொண்ட பல பகுதிகள் அடையாளம் காணப்படாமல் உள்ளன. இதனடிப்படையில் இலங்கையில் கிளிநொச்சி மாவட்டத்தின் கௌதாரிமுனைப் பிரதேசத்தில் சூழல் சார் சுற்றுலாத்துறையை விருத்தி செய்வதற்கான உள்ளார்ந்த வள வாய்ப்புக்களினைக் கண்டறிதல் தொடர்பாக இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வின் நோக்கம்**

கிளிநொச்சி மாவட்டத்தின் கௌதாரி முனையில் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வானது பின்வரும் நோக்கங் களைக் கொண்டுள்ளது.

1. கௌதாரி முனையில் சூழல்சார் சுற்றுலாத்துறையை விருத்தி செய்வதற்கு ஏதுவாகக் காணப்படும் உள்ளார்ந்த வள வாய்ப்புக்களைக் கண்டறிதல்.
2. கௌதாரி முனையில் காணப்படும் சூழல்சார் சுற்றுலாத் துறையின் தற்போதைய நிலையினை வெளிப்படுத்துதல்.

**இலங்கையில் சுற்றுலாத்துறை**

இலங்கைத் தீவானது அதனுடைய கடற்கரை, நீர் விளையாட்டுக்கள், ஆழ் கடல் மீன்பிடி, நீருக்கடியில் புகைப்படம் எடுத்தல், சுழியோடுதல், பவளப்பாறைகளைப் பார்வையிடல், திமிங்கிலங்களைப் பார்வையிடுதல் போன்ற செயற்பாடுகளுக்கு மிகப் பிரபல்யமானதாகும். இவை மாத்திரமன்றி வரலாற்று முக்கியத்துவமான இடங்கள், காட்டு வனஜீவராசிகளின் சரணாலயம் போன்றனவும் அதிகமான சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்துள்ளன. இலங்கையில் 2009 ஆம் ஆண்டு உள்நாட்டு

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து சுற்றுலாத்துறையானது குறிப்பிடக் கூடிய வளர்ச்சியை கண்டுள்ளது. 1980 ஆம் ஆண்டுகளைத் தொடர்ந்து இலங்கையில் காணப்பட்ட இன முரண்பாடானது இந்நாட்டின் சுற்றுலாத்துறையை மிகவும் பாதிப்படையச் செய்திருந்தது. 1982 ஆம் ஆண்டு 407,230 ஆகக் காணப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் வருகை படிப்படியாக குறைவடைந்து 1996 இல் 302,000 பயணிகளாகக் காணப்பட்டது. எனினும் 2004 ஆம் ஆண்டு வரை சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து அது 566,200 பேராகக் காணப்பட்டது. 2004 இல் ஏற்பட்ட சுனாமி மற்றும் 2009 வரை நாட்டில் மீண்டும் ஏற்பட்ட உள்நாட்டு முரண்பாடுகள் என்பன சுற்றுலாப் பயணிகளின் வருகையில் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன. 2010 இல் 654,476 நபர்களாக காணப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2016 இல் 2,050,832 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் இக் காலப் பகுதியில் உள்நாட்டு சுற்றுலாத்துறையும் மிகவும் சாதகமான முறையில் வளர்ச்சி கண்டுள்ளது (Sri Lanka Tourism Development Authority, 2016).

இலங்கைக்கு இரண்டு மில்லியனிற்கு அதிகமான சுற்றுலாப் பயணிகள் 2016 ஆம் ஆண்டு வருகை தந்துள்ளனர். இது இலங்கையின் சுற்றுலாத்துறை வரலாற்றில் புதியதோர் அடைவாகும். இலங்கையில் சுற்றுலாத் துறையின் வளர்ச்சி 2016 ஆம் ஆண்டிலும் சிறப்பாகவே காணப்பட்டுள்ளது. இலங்கையில் அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தரும் மிக முக்கியமானதோர் மூலமாக சுற்றுலாத்துறை காணப்படுவதோடு அந்நியச் செலாவணியை ஈட்டுகையில் இதன் பங்களிப்பானது 2015 ஆம் ஆண்டில் 2980.6 மில்லியன் டொலர்கள் ஆக காணப்பட்டது. இது படிப்படியான வளர்ச்சிப்போக்கை காட்டியதோடு அந்நியச் செலாவணி ஈட்டுகையில் 2016 ஆம் ஆண்டில் 3518.5 மில்லியன் டொலர்கள் ஆக உயர்வடைந்தது. அத்துடன் 2015 ஆம் ஆண்டு சுற்றுலாத் துறை மூலம் 319,436 வேலை வாய்ப்புக்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் உருவாக்கப்பட்டன (Sri Lanka Tourism Development Authority, 2016).

## சூழல்சார் சுற்றுலாத்துறையை வரையறுத்தல்

சூழல்சார் சுற்றுலாத்துறை தொடர்பாக இதுவரை பல்வேறு சர்ச்சைக்குரிய வரைவிலக்கணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதாவது நிறுவனங்கள், அமைப்புக்கள் போன்றன தங்களது தேவைகள், நோக்கங்களுக்கு ஏற்ப சூழல் சார் சுற்றுலாத் துறையை வரைவிலக்கணப்படுத்துகின்றன. இதன் காரணமாக பெரும் பாலான வரைவிலக்கணங்கள் பொருளற்றதாக விளங்குகின்றன (Duha Buchsbaum, 2004). எனினும், பலராலும் பயன்படுத்தப்படுகின்றதொரு வரைவிலக்கணத்தை சர்வதேச சூழல்சார் சுற்றுலாத் துறை அமைப்பு வழங்கியுள்ளது (The International Ecotourism Society, 2017). அதாவது "இயற்கைப் பிரதேசங்களிற்கு ஒரு வகையான கரிசனையுடன் கூடிய பிரயாணமானது சூழலைப் பாதுகாப்பதும், குறிப்பிட்ட பிரதேச மக்களின் வாழ்கைத்தரத்தை உயர்த்தக் கூடியதுமாக காணப்படும் போது அது சூழல்சார் சுற்றுலாத்துறை எனலாம்" என்பதாகும் (The International Ecotourism Society, 2017). Honey என்பவர் "சூழல் சார் சுற்றுலாத் துறை என்பது பொதுவாக பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களிற்கு பயணிப்பதாகும். இது மிகவும்

குறைந்தளவான பாதிப்பினை சூழலிற்கு ஏற்படுத்துவதுடன், சுற்றுலாப் பயணிகளை அறிவு ரீதியாக விருத்தியடையச் செய்தல், இயற்கையைப் பாதுகாப்பதற்கான நிதியினை வழங்குதல் போன்ற வற்றுடன் குறிப்பிட்ட பிரதேச மக்களின் பொருளாதார வளர்ச்சி, முகாமைத்துவம் போன்றவற்றிற்கு நேரடியாக பயன்படுவதுடன், மனித உரிமை மற்றும் வேறுபட்ட கலாசாரம் போன்றவற்றிற்கும் மதிப்பளிக்கும் ஒரு துறை" என தற்காலத்திற்கு பொருந்தக்கூடியதான வரைவிலக்கணத்தை வெளியிட்டுள்ளார் (Honey, **1999**).

மேற் குறிப்பிடப்பட்ட வரைவிலக்கணத்துடன் தொடர்பான மேலும் ஒரு வரைவிலக்கணம் Fennell என்பவரால் வெளியிடப்பட்டுள்ளது. அவர் சூழல் சார் சுற்றுலாத் துறையை பின்வருமாறு வரைவிலக்கணப் படுத்துகின்றார். **"இது ஒரு மிகக் குறைவான பாதிப்பைக் கொண்ட இயற்கைச் சுற்றுலாத் துறை. அது உயிரினங்கள் மற்றும் அவற்றின் வாழ்விடங்கள் போன்றவற்றை பாதுகாப்பதற்கு பங்களிப்பினை வழங்குவதன் மூலம் நேரடியாகவோ அல்லது சுற்றுலாத் துறை மையங்களில் வாழும் மக்களுக்கு போதியளவு வருமானத்தை ஏற்படுத்துவதன் மூலம் மறைமுகமாகவோ உயிரினங்கள் மற்றும் சுற்றுச் சூழல் போன்றவற்றின் பாதுகாப்பிற்கு பங்களிப்பினை வழங்கி குறிப்பிட்ட பிரதேசத்தை வருமானம் மூலமாக மாற்றுகின்றமையை சூழல்சார் சுற்றுலாத்துறை எனலாம்"** என்று கூறியுள்ளார் (Fennell, **2003**).

தற்போது பல்வேறு வகையான சூழல் சார் சுற்றுலாத் துறைகள் காணப்படுகின்றன. இயற்கை சுற்றுலாத்துறை, வனவிலங்கு சுற்றுலாத்துறை, சாகச சுற்றுலாத்துறை போன்றவற்றை உதாரணங்களாகக் குறிப்பிடலாம். மேற்குறிப்பிட்ட சுற்றுலாத் துறைகளைப் போலல்லாது சூழல் சார் சுற்றுலாத் துறையானது சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதுடன் குறிப்பிட்ட பிரதேச மக்களுக்கு வருமானத்தையும் பெற்றுக் கொடுக்கின்றது. எனவே சூழல் சார் சுற்றுலாத் துறையின் நோக்கமானது, தனித்து பொழுது போக்கு அம்சங்களை வழங்குவதல்லாமல், பொருளாதார நன்மைகளையும் விளைவிப்பதாகவும் அமைந்துள்ளது (Brandon, **1996**). சூழல் மற்றும் அதில் வாழும் மக்கள் தொடர்பாக அறிவு, அக்கறை போன்றவற்றை வளர்ப்பதற்கு சூழல் சார் சுற்றுலாத் துறை ஒரு சிறந்த கருவியாகக் காணப்படுகின்றது.

## இலங்கையில் சூழல்சார் சுற்றுலாத்துறை

அண்மைக் காலமாக இலங்கையில் சூழல் சார் சுற்றுலாத்துறை சாதகமான வளர்ச்சிப் போக்கைக் காட்டுகின்றது. இலங்கையில் காணப்படும் மத்திய கோட்டு உயிர் பல்லினத் தன்மை இங்கே சூழல் சார் சுற்றுலாத்துறையை விருத்தி செய்வதற்கு மிகவும் சாதகமாகக் காணப்படுகின்றது. இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 13% மான பகுதி வனவிலங்கு மற்றும் இயற்கைப் பாதுகாப்பிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய பல்வேறு அம்சங்கள் இலங்கையில் காணப்படுவதாக இலங்கை சுற்றுலாத் துறை அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிடுகின்றது. இவை சூழல்சார் சுற்றுலாத் துறையை இலங்கையில் சிறப்பான முறையில் விருத்தி செய்வதற்கு சாதகமாகக் காணப்படுகின்றன. இலங்கையில் காணப்படும் பல்வேறு வகையான தாவர விலங்கினங்கள், பறவைகள் மற்றும் நீர் நிலைகள் என்பன சூழல்சார் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்

கூடியதாக விளங்குகின்றன. பொலன்னறுவை, சிகிரியா, அனுராதபுரம், கண்டி, சிங்கராஜா வனம், இலங்கையின் மத்திய மலைநாடு போன்ற எட்டு இடங்கள் உலக மரபுரிமைப் பகுதிகளாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளன. இவை சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளன. இலங்கையில் காணப்படும் மத்திய கோட்டு காலநிலையும் அதனுடன் தொடர்புடைய உயிர்ப் பல்லினத்தன்மையும் சூழல்சார் சுற்றுலாத் துறையை விருத்தி செய்வதற்கான மிக முக்கிய உள்ளார்ந்த வள வாய்ப்புக்களாகக் காணப்படுகின்றன. உதாரணமாக யால, குமண, வில்பத்து போன்ற பகுதிகளைக் குறிப்பிடலாம். இலங்கையில் காணப் படும் விருந்துபசார நிலமைகளும் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதில் முக்கியபங்காற்றுகின்றமை மற்றொரு குறிப்பிடத்தக்க விடயமாகும்.


இலங்கையில் சுற்றுலாத் துறை சிறப்பாக வளர்ச்சி அடைந்திருந்தாலும், சூழல்சார் சுற்றுலாத்துறையின் வளர்ச்சியானது சற்று பின்தங்கியதாகவே காணப்படுகின்றது. இலங்கையின் ஒருசில பகுதிகளில் சூழல்சார் சுற்றுலாத்துறை அபிவிருத்தி திட்டங்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. குறிப்பாக வளவ நதி சூழல் சார் சுற்றுலாத்துறை அபிவிருத்தி திட்டம் இலங்கையில் காணப்படும் மிக முக்கியமானதொரு திட்டமாகும். இலங்கையில் சூழல்சார் சுற்றுலாத்துறையை தேசிய ரீதியில் விருத்தி செய்வதற்கு செயற்படும் நிறுவனங்களில் இலங்கை சூழல்சார் சுற்றுலா நிறுவனம் (Sri Lanka Ecotourism Foundation) மிக முக்கியமானதாகும். 1998 ஆம் ஆண்டு இது ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் சுற்றுலாத் துறையானது அந்நியச் செலாவணி மற்றும் தொழில் வாய்ப்பினைப் பெற்றுத் தரும் முக்கிய மூலமாகக் அடையாளம் காணப்பட்டுள்ளது. பல்வேறு வள வாய்ப்புக்கள் இலங்கையில் காணப்பட்ட போதும் முழுமையான ஒரு பொருளாதார அபிவிருத்தியை நோக்கி சுற்றுலாத்துறை விருத்தி செய்யப்படவில்லை என்றே கூறலாம். சூழல் சார் சுற்றுலாத்துறையைப் பொறுத்தவரையில் அதிலிருந்து பெறப் படும் பொருளாதார நன்மைகள் குறித்த சுற்றுலாத் தளம் அமைந்துள்ள பிரதேசத்தின் பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு விருத்திக்காக செலவிடப்பட வேண்டும்.

## ஆய்வுப் பிரதேசம்

கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்கு கரையோரத்தில் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் 7 கிலோ மீற்றர் நீளத்தினையும் 3 கிலோ மீற்றர் அகலத்தினையும் கொண்டதாக கௌதாரி முனை கிராமசேவகர் பிரிவு அமைந்துள்ளது. ஆய்வுப் பிரதேசமானது வட அகலாங்கு 9º 32' - 9º 37' இற்கு இடையிலும் கிழக்கு நெட்டாங்கு 80º 03' – 80º 08' இற்கு இடையிலும் அமைந்துள்ளது. இப்பிரதேசத்தின் அமைப்பானது வட மேற்கிலிருந்து தென்கிழக்காக ஓர் ஒடுங்கிய நிலத்திணிவாகக் காணப்படுகிறது. வடக்கே பல தீவுகள் கரையோர பற்றைக் காடுகளைக் கொண்டதாக காணப்படுகின்றன. பூவரசந்தீவு, மாந்தீவு, கண்ணாதீவு என்பனவே அவையாகும் (வரைபடம் 1). இப் பிரதேசத்தின் மொத்த நிலப்பரப்பு 28.72 சதுரகிலோ மீற்றர்கள் ஆகும். இது மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் (494 சதுரகிலோ மீற்றர்கள்) 5.01% ஆகும். கௌதாரி முனை கிராமசேவகர் பிரிவின் எல்லைகளாக மேற்கே யாழ்ப்பாணக் கடல், கிழக்கே பரமன்கரை கிராமம், தெற்கே பள்ளிக்குடா கடல், வடக்கே யாழ்ப்பாண கடனீரேரி என்பன அமைந்

துள்ளன. கடற்கரை காலநிலை மற்றும் கடலோர சூழல் தொகுதியினை கொண்ட இப் பிரதேசத்தின் சராசரி வெப்பநிலை 28$^0$C தொடக்கம் 30$^0$C ஆகும். வருட சராசரி மழைவிழ்ச்சி 950 mm ஆகும். இங்கு நிறைந்து காணப்படும் இயற்கை வளங்கள் சூழல்சார் சுற்றுலாத் துறையை விருத்தி செய்வதற்கு மிகவும் சாதகமாக உள்ளன. விவசாயத்தையும், மீன்பிடியையும் பிரதான தொழிலாகக் கொண்ட இப் பகுதி மிகக் குறைவான குடித்தொகையையே கொண்டுள்ளது (Statistical Hand Book, Divisional Secretariat of Poonakary, *2016*).

வரைபடம் 1 – ஆய்வுப் பிரதேசத்தின் அமைவிடம்



### ஆய்வு முறையியல்

இவ் ஆய்வுக் கட்டுரையானது முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வாளர்களினால் பல்வேறு அலுவலகங்கள், தனிப்பட்ட நபர்கள் என்பவர்களிடமிருந்து முதலாம் நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. தகவல் தருனர்களைத் தெரிவு செய்வதற்கு இவ் ஆய்வினை மேற்கொண்டவர்களினால் நோக்க மாதிரியெடுப்பு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ் ஆய்வில் 11 முக்கியமான தகவல் தருனர்களிடமிருந்து தகவல் பெறப்பட்டுள்ளன. இவர்களுள் ஆசிரியர்கள், கிராம சேவை அலுவலர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் போன்றோர் உள்ளடங்குகின்றனர். அத்துடன் 18 பிரதேச வாசிகளும் 10 உள்ளக சுற்றுலாப் பயணிகளும் நேர்காணலிற்கு உட்படுத்தப்பட்டனர். இவர்களிடமிருந்து கௌதாரி முனையில் சூழல்சார் சுற்றுலாத் துறையை விருத்தி செய்வதற்கான உள்ளார்ந்த வள வாய்ப்புக்கள் தொடர்பாக வரையறுக்கப்படாத வினாக்களைப் பயன்படுத்தி தகவல்கள் பெறப்பட்டன. அத்துடன் இவ் ஆய்விற்கான மேலதிக தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் கட்டமைக்கப்பட்ட வினாக்களும் பயன்படுத்தப்பட்டன. இவ் ஆய்வில் இரண்டாம் நிலை தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் சுற்றுலாத் துறை தொடர்பான நூல்கள், புள்ளி விவரக்கையேடுகள் என்பனவும் பயன் படுத்தப்பட்டுள்ளன. முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவு மூலங்களிலிருந்து பெறப்பட்ட தரவுகள் விமர்சன ரீதியில் பகுப்பாய்வு செய்து மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு பொருள்கோடல் செய்யப்பட்டுள்ளது. இவ் ஆய்விற்காக சேகரிக்கப்பட்ட எல்லாத் தரவுகளினதும் நம்பகத் தன்மை மற்றும் உண்மைத் தன்மையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவ் ஆய்வின் முடிவுகள் விவரண முறையில் கொடுக்கப் பட்டுள்ளன.

### ஆய்வின் முடிவுகளும் பரிந்துரைகளும்

கௌதாரி முனை கிராமசேவகர் பிரிவில் சூழல்சார் சுற்றுலாத்துறையை விருத்தி செய்வதற்கான பல்வேறு வளங்கள் காணப்படுகின்றன. உட்கட்டமைப்பு வசதியில் காணப்படும் குறைபாடுகள், உள்ளூர் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படாமை, குறித்த பகுதியில் காணப்படும் சுற்றுலா வளங்கள் தொடர்பாக பொது மக்கள் மத்தியில் வெளிப்படுத்தப்படாமை போன்ற காரணங்கள் கௌதாரி முனையின் சுற்றுலாத் துறை விருத்தியை பாதித்துள்ளன. அத்துடன் இப் பகுதி தொடர்பாக ஆய்வுகள் மிகக் குறைவாக காணப்படுவதனால் சுற்றுலாத் துறையை விருத்தி செய்வதற்கு ஏதுவாய் காணப் படும் வளங்கள் தொடர்பாக முழுமையாக ஆய்விற்கு உட்படுத்தப்படவில்லை. எனவே இவ் ஆய்வானது கௌதாரி முனையில் சூழல்சார் சுற்றுலாத் துறையை விருத்தி செய்வதற்கு ஏதுவாய் காணப்படும் உள்ளார்ந்த வளவாய்ப்புக்கள் தொடர்பாக ஆராய்கின்றது.

### கௌதாரி முனையில் சூழல்சார் சுற்றுலாத் துறையை விருத்தி செய்வதற்கு ஏதுவான உள்ளார்ந்த வளவாய்ப்புக்கள்

கௌதாரி முனையில் சூழல் சார் சுற்றுலாத் துறையை விருத்தி செய்வதற்கு ஏதுவாக பல்வேறு வளங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக இப்பகுதியில் காணப்படும் கண்டல் தாவரங்கள், மாசாக்கப்படாத கடற் கரையோரங்கள், மணற் குன்றுகள், அழகிய சிறு தீவுகள், செம்பன் காடுகள், பறவைகளின் வாழ்விடம்,

கலாசார மற்றும் மரபுரிமை இடங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். வரைபடம் 01 ஆனது கௌதாரி முனையில் காணப்படும் சூழல்சார் சுற்றுலாத் துறையை விருத்தி செய்வதற்கு வாய்ப்பாக காணப்படும் உள்ளார்ந்த வளங்களினை எடுத்துக் காட்டுகின்றது.

### மணற் குன்றுகள்

கௌதாரிமுனை கிராமசேவகர் பிரிவில் உள்ளடங்கும் ஐந்து கிராமங்களில் இம் மணற்குன்றுகள் காணப்படுகின்றன. இவை பெரும்பாலும் கடற்கரையை அண்டிய பகுதிகளில் மிகப் பெரியதாகவும் அதிகமாகவும் காணப்படுகின்றன. இம்மணற் குன்றுகளை பாதுகாக்கும் நடவடிக்கையில் பூநகரிப் பிரதேச சபையும் பிரதேச செயலகமும் இணைந்து செயற்படுகின்றன. இங்கு காணப்படும் மணற்குன்றுகள் அண்ணளவாக 600 ஹெக்டெயர் பரப்பளவில் பரந்து காணப்படுகின்றன. இம்மணற் குன்றுகளின் உயரம் அண்ணளவாக 6 மீற்றர்கள் தொடக்கம் 15 மீற்றர்கள் வரை உயரமுடையதாகக் காணப்படுகின்றன. இலங்கையின் வட மாகாணத்தில் மனித செயற்பாடுகள் காரணமாக அதிகம் பாதிக்கப்படாத மணற் குன்றுகளை இப் பகுதியில் மாத்திரமே காணலாம். இங்கு காணப்படும் மணற்குன்றுகள் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடியதாக மிகவும் அழகாக அமைந்து காணப்படுகின்றன.

### கண்டல் தாவரங்கள்

கௌதாரி முனையில் கண்டல் தாவரங்கள் 2.2 ஹெக்டெயர் பரப்பளவில் பரந்து காணப்படுகின்றன. இங்கு காணப்படும் கண்டல் தாவரங்கள் கடற்கரையை ஓரளவு அண்மித்ததாகவும் பெரியவையாகவும் சிறியவையாகவும் காணப்படுகின்றன. இக் கண்டல் தாவரங்கள் கடலினை அண்டியதாகக் காணப்படுவதனால் பல கடல் வாழ் உயிரினங்களுக்கு வாழ்விடமாக அமைவதோடு சுற்றுலாப் பயணிகளின் பார்வைக்கு இதமானதாகவும் காணப்படுகிறன. குறிப்பாக இப் பகுதியில் இறால் உற்பத்தியே அதிகம் இடம்பெறுகின்றது. எனினும் இக் கண்டல் தாவரங்கள் மீனவர்களினால் மீன்பிடிக்குப் பயன்படுத்துவதற்காக அதிகம் அழிக்கப்படுகின்றன. எனவே இவ் அரியவகை கண்டல் தாவரங்கள் பாதுகாக்கப்படவேண்டிய நிலையில் உள்ளமையால் இது தொடர்பாக குறித்த பகுதியில் காணப்படும் உள்ளூர் மீனவ அமைப்புக்களும், பூநகரி பிரதேச செயலகமும் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும்.

### மாசாக்கப்படாத கடற்கரையோரங்கள்

இவ்ஆய்வுப் பிரதேசத்தின் தென் பகுதியில் சுற்றுலாத் துறைக்கு மிகவும் பொருத்தமான 12 ஹெக்டெயர் அளவி-லான கடற்கரை காணப்படுகின்றது. இக்கடற்கரைகள் சுற்றுலாப் பயணிகள் பொழுது போக்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சாதகமாகவுள்ளன. இங்கே காணப்படும் தாழை மரங்கள் இக் கடற்கரையினை மேலும் அழகான தாக்குகின்றது. இக் கடற்கரையோரத்திலிருந்து யாழ்பாணத்தின் சில பகுதிகளை குறிப்பாக கிழக்கு அரியாலை மற்றும் அதனை அண்டிய பகுதிகளை மிகத் தெளிவாக பார்வையிடக் கூடியதாகக் காணப்படுகின்றது.

### சிறு தீவுகள்

கௌதாரி முனை கிராமசேவகர் பிரிவிற்குட்பட்டதான மாந்தீவு, பூவரசந்தீவு, கண்ணாத்தீவு ஆகிய மூன்று சிறிய தீவுகள் காணப்படுகின்றன. இத் தீவுகளின் மொத்தப் பரப்பளவு 53.08

ஹெக்டெயர்கள் ஆகும். இத் தீவுகள் யாழ்ப்பாணக் கடல் நீரேரியில் யாழ்ப் பாணத்திற்கும் கௌதாரி முனைக்கும் இடையில் அமைந்துள்ளன. இம் மூன்று தீவுகளும் யுத்தம் காரணமாக பாதிக்கப் பட்டு கடந்த சில தசாப்தங்களாக மனித பாவனையற்ற பகுதிகளாக காணப் படுகின்றன. இங்கே கண்டல் தாவரங் களும் முட்புதர் காடுகளுமே அதிகம் காணப்படுகின்றன. இத் தீவுகள் சுற்றுலாத் துறை விருத்திக்கு மிகவும் சாதகமாக வுள்ளன. குறிப்பாக இவற்றைச் சூழவுள்ள கடலானது மிகவும் ஆழம் குறைந்ததா கவும் அலைகளின் தாக்கம் அற்றதாகவும் காணப்படுவதனால் பொழுது போக்கிற்கு மிகச் சிறந்த இடங்களாகக் காணப்படு கின்றன.

காடுகள்

கௌதாரி முனைப் பகுதியில் கண்டல் தாவரங்களுடன் பாலை, வீரை, கிண்ணை, தாழை போன்ற மரங்களை உள்ளடக்கி யதாக 45.03 ஹெக்டெயர்கள் பரப்பளவான காட்டுப்பகுதி காணப் படுகின்றது. இக் காடுகள் சிறப்பாக செம்பன் காடுகள் என அழைக்கப்படு கின்றன. இக்காடுகள் தற்போது மனித நடவடிக்கையால் பாதிப்பிற்குள்ளாகி யுள்ளது. இக்காடுகளைப்பாதுகாப்பதன் மூலம் அதனை சுற்றுலாத்துறை விருத்திக் குரிய ஒரு வள வாய்ப்பாக பயன்படுத் தலாம்.

பறவைகளின் வாழ்விடம்

இவ்வாய்வுப்பிரதேசத்தில் 70.45 ஹெக்டெயர்கள் பரப்பளவான சதுப்பு நிலம் பறவைகள் வாழ்வதற்கு ஏற்றதாகக் காணப்படுகின்றது. இப் பகுதியில் பறவைகள் குறித்த சில பருவ காலங்களில் அதிகம் காணப்படுகின்றன. ஏனைய காலப் பகுதிகளில் கௌதாரிப் பறவை களே அதிகம் காணப்படுகின்றன. குறிப் பாக மழை காலங்களில் இச் சதுப்பு நிலங் களில் நீர் தேங்கி இருப்பதுடன் அது பறவைகள் வாழ்வதற்கு மிகப் பொருத்த மான பகுதிகளாகவும் காணப்படுகின்றன. இப் பகுதியில் கௌதாரிப் பறவைகள் அதிகம் காணப்பட்ட போதிலும் மக்களி னால் அதிகம் வேட்டையாடப்படுவதி னால் அவற்றின் எண்ணிக்கை குறை வடைந்துள்ளது. இப் பறவைகளைப் பாதுகாக்கும் பொருட்டும் சுற்றுலாத் துறையை நன்குவிருத்தி செய்யவும் குறிப்பிட்ட சதுப்பு நிலத்தை பறவைகள் சரணாலயமாக எதிர்காலத்தில் பிரகடனப் படுத்தலாம்.

கலாசார மற்றும் மரபுரிமை இடங்கள்

குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படும் கல்முனை வெளிச்ச வீடு சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய தோர் அம்சமாகக் காணப்படுகின்றது. இவ் வெளிச்ச வீடு ஒல்லாந்தர் காலத்தில் கட்டப்பட்டதாக நம்பப்படுகின்றது. எனினும் ஆங்கிலேயர் காலத்தில் இவ் வெளிச்ச வீடு மீண்டும் புனரமைக்கப் பட்டுள்ளது. பல ஆண்டுகளாக இது பராமரிக்கப்படாமல் காணப்படுவதனால் குறித்த வெளிச்சவீடு அழிவடைகின்றது. கௌதாரி முனையில் காணப்படும் சோழர் காலத்தில் கட்டப்பட்ட ஆலயங்கள் சுற்றுலாப் பயணிகளை கவரக்கூடியதாகவுள்ளது. குறிப்பாக இங்கே காணப்படும் மன்னித்தலை சிவன் கோவில் மற்றும் சென் செபஸ்ரியர் தேவாலயம் என்பன முறையே சோழர் காலத்திலும் போத்துக்கேயர் காலத்திலும் கட்டப்பட்டவையாகும். மன்னித்தலை சிவன் கோவில் குறித்த பகுதியில் காணப்படும் பவளப் பாறைகள், செங்கற்கள் என்பவற்றைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. இவ் ஆலயத்தின்

கட்டடக் கலை சிறப்பை ஆராய்கின்ற போது அது சோழர் காலத்தை ஒத்ததாக காணப்படுகின்றது. தமிழர் வரலாற்றையும் கலாசாரத்தையும் வெளிப்படுத்தும் ஒரு சின்னமாக இவ் ஆலயம் திகழ்கின்றமையால் சுற்றுலாப் பயணிகளால் பார்வையிடப்படும் முக்கியமான தோர் இடமாக அது அமைந்துள்ளது. கௌதாரி முனையில் காணப்படும் சென் செபஸ்ரியர் தேவாலயம் போத்துக்கேயர் காலத்தில் கட்டப்பட்டதாக நம்பப்படுகின்றது. நீண்ட காலமாக இவ் ஆலயமானது கிறிஸ்தவ மக்களின் யாத்திரைத் தலமாக இருந்து வருகின்றது. இவ் ஆலயத்தில் வருடம் தோறும் திருவிழா இடம்பெறுவதோடு அதனைக் காண ஏராளமான மக்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருந்து வருகை தருகின்றனர்.

**கௌதாரிமுனையில் சூழல்சார் சுற்றுலாத் துறை தொடர்பாக உள்ளூர் மக்களின் கருத்துக்கள்**

கௌதாரிமுனையில் சுற்றுலாத் துறை தொடர்பாக ஆய்வினை மேற்கொண்ட போது சூழல்சார் சுற்றுலாத் துறையின் தற்போதைய நிலை தொடர்பாக குறித்த பிரதேச மக்கள் பல்வேறு கருத்துக்களை முன்வைத்திருந்தனர். குறிப்பாக உள்ளூர் மக்களின் கருத்துக்களின் அடிப்படையில் நோக்குகின்ற போது, மிக நீண்ட காலமாக இப் பகுதிக்கு சுற்றுலாப் பயணிகள் வருவதாகவும், நாட்டில் யுத்தம் தீவிரம் அடைந்த காலப் பகுதியில் இது மக்கள் நடமாட்டம் அற்ற பகுதியாகவும் காணப்பட்டதாகக் குறிப்பிட்டிருந்தனர். அத்துடன் 2010 ஆம் ஆண்டிற்குப் பின்னர் மீண்டும் கணிசமான அளவு சுற்றுலாப் பயணிகள் வருவதாகவும் அதில் பாடசாலை மாணவர்களே அதிகம் இவ்விடங்களைப் பார்வையிடுவதற்காக வருவதாகவும் குறிப்பிட்டிருந்தனர். எனினும் இங்கு வரும் சுற்றுலாப்பயணிகளை உரிய முறையில் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் எவையும் காணப்படவில்லை. எனினும் தற்போது அங்கு காணப்படும் சுற்றுலா நடவடிக்கை முயற்சிகளினால் உள்ளூர் மக்கள் வருமானம் எதனையும் பெற்றுக்கொள்ள முடியாத நிலையிலேயே காணப்படுகின்றனர். அத்துடன், இங்கு சுற்றுலாப் பயணிகளாக வருபவர்கள் தங்குமிட வசதியினைப் பெற்றுக் கொள்ள முடியாமல் இருப்பதனால், குறித்த இயற்கை அம்சங்களைப் பார்வையிட்ட பின்னர் மீண்டும் ஒரு சில மணி நேரத்தில் திரும்பிச் சென்று விடுகின்றனர். குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் வாழும் மக்கள் சூழல்சார் சுற்றுலாத் துறை விருத்தி தொடர்பாகவோ, அதனால் ஏற்படும் சமூக பொருளாதாரத் தாக்கங்கள் தொடர்பாகவோ அதிகம் அறியாதவர்களாகவே காணப்படுகின்றனர்.

கௌதாரிமுனையில் சூழல்சார் சுற்றுலாத் துறையை விருத்தி செய்வது தொடர்பாக பிரதான தகவல் தருனர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் நோக்குகின்ற போது கிளிநொச்சி மாவட்டத்திலே சுற்றுலாத் துறையை விருத்தி செய்வதற்கு அதிக வளவாய்ப்புக்களைக் கொண்ட பகுதியாக கௌதாரிமுனை காணப்படுவதாகவும், இப் பகுதியில் சுற்றுலாத்துறையை இலங்கையின் ஏனைய பகுதிகளில் விருத்தி செய்துள்ளதைப் போன்று உரிய முறையில் திட்டமிடப்பட்டு விருத்தி செய்யப்படுமானால் அது அப்பகுதி மக்களின் பொருளாதார அபிவிருத்தியில் முக்கிய பங்கினை வகிக்குமெனவும் குறிப்பிட்டிருந்தனர். மேலும், கௌதாரி முனை சூழல்சார் சுற்றுலாத்துறையை

விருத்தி செய்வதற்கு அதிகளவான வள வாய்ப்புக்களைக் கொண்டிருந்த போதும் அரசாங்கமோ அல்லது தனியார் துறையோ இப் பகுதியில் சுற்றுலாத் துறையை விருத்தி செய்வதற்கான பாரிய திட்டமெதனையும் முன்னெடுக்கவில்லையெனவும் குறிப்பிட்டிருந்தனர். குறித்த பகுதியில் சூழல்சார் சுற்றுலாத் துறையை விருத்தி செய்வதற்கு உகந்ததாக காணப்படும் வள வாய்ப்புக்கள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டு அதனை வெளிக்கொண்டுவருவதனூடாக சுற்றுலாத்துறை முதலீட்டாளர்களை இப் பகுதியில் முதலீடு செய்வதற்கு உள்ளீர்க்க முடியுமெனவும் உள்ளூர் மக்களும் பிரதான தகவல் தருநர்களும் தங்களது கருத்துக்களில் பிரதானமாக வலியுறுத்தியிருந்தனர்.

## முடிவுரை

மேலே குறிப்பிட்ட சுற்றுலா வளங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்குகின்ற போது சூழல்சார் சுற்றுலாத் துறையை விருத்தி செய்வதற்கு இயற்கையால் வழங்கப்பட்டதோர் பிரதேசமாகவே கௌதாரி முனையை நாம் கருத முடிகின்றது. இப்பகுதியில் காணப்படும் சுற்றுலாத்துறை தொடர்பிலான வளங்கள் சுற்றுலாத்துறை விருத்திக்கு பயன்படுத்தப்படவில்லை. குறித்த பகுதியில் காணப்படும் சுற்றுலாத்துறை வளங்கள் தொடர்பாக போதியளவு ஆய்வுகள் இடம்பெறாமை இப் பகுதியில் சூழல்சார் சுற்றுலாத் துறையின் விருத்தியைப் பெரிதும் பாதித்துள்ளது. இங்கே காணப்படும் சுற்றுலா வளங்கள் உள்நாடு மற்றும் சர்வதேச ரீதியில் வெளிப்படுத்தப் படாமையால் இவ்வளங்களைப் பயன் படுத்தி வருமானத்தை உருவாக்குவது மிகக் கடினமானதாகவே உள்ளது. இதனடிப்படையில் இவ் ஆய்வானது கௌதாரி முனையில் காணப்படும் சுற்றுலா வளங்களை சுருக்கமான முறையில் எடுத்துக் காட்டியுள்ளது. எனவே இவ் ஆய்வானது சுற்றுலாத் துறை தொடர்பான ஆய்வாளர்களுக்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் ஓர் ஆரம்பப் புள்ளியாக அமைகின்றது.

ஒளிப்படங்கள்: கௌதாரி முனைப் பிரதேசத்தில் சூழல்சார் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடியதான இடங்கள் (வெளிக்கள ஆய்வு, 2017).

கௌதாரிமுனைப் பிரதேசத்தினை நோக்கிய பிரயாணத்தின் போது அப்பிரதேசத்தினை அண்மித்த இரு மருங்கிலும் வரவேற்று நிற்கும் கண்டல் தாவரங்கள்.



கௌதாரிமுனைப் பிரதேசத்தில் அமைந்துள்ள அனேகமான மணற்குன்றுகள் ஒவ்வொன்றின் உச்சியிலும் அமைந்து காணப்படும் நாவல் மரங்கள்.



கௌதாரிமுனைப் பிரதேசத்தில் காணப்படும் மணற்குன்றுகளின் மத்தியில் உயர்வாக வளர்ச்சியடைந்துள்ள பனை மரங்கள்.




கௌதாரிமுனைப் பிரதேசத்தின் உயர்ந்த மணற்குன்றுகளின் உச்சிப்பகுதியிலிருந்தான யாழ்ப்பாணக் கடற்பகுதியை நோக்கிய அழகிய காட்சி.



கௌதாரிமுனைப் பிரதேசத்தில் காணப்படும் மணற்குன்றுகளுடன் இணைந்த பனை மரங்களின் அழகிய விதானங்கள்.



கௌதாரிமுனைப் பிரதேசத்தில் சுற்றுலாப்பயணிகளை கவரக்கூடியதான மென் சாய்வினையுடைய தூய்மையான மணற்குன்றுகள்.



கௌதாரிமுனைப் பிரதேசத்தில் காணப்படும் கரையோரப் பகுதிகளை அண்மித்தான
நெல் வயல்களின் காட்சிகள்.



கௌதாரிமுனைப் பிரதேசத்தில் காணப்படும் மக்கள் குடியிருப்பினை அண்மித்ததோர்
மீன் பிடித்தொழிலாளர்களின் இறங்கு துறை.



கௌதாரிமுனைப் பிரதேசத்தின் மத்தியில் அமைந்து காணப்படும் ஓர் கைவிடப்பட்ட குளம். இது அதிகளவிலான தாமரைகளையும், பனிச்சை மரங்களையும் உள்ளடக்கியுள்ளது.



கௌதாரிமுனைப் பிரதேசத்தின் கரையோரத்தினை அழகுபடுத்தி நிற்கும் கரையோரத் தாவரங்கள்.



## References

Brandon, K. (1996). Ecotourism and Conservation: A Review of Key Issues. Environment department papers toward environmentally and socially sustainable development, biodiversity series. Paper no 033, The World Bank, Washington DC, USA.

Divisional Secretariat of Poonakary (2016). Statistical Hand Book, Divisional Secretariat of Poonakary, Poonakary.

Duhá Buchsbaum, B. (2004). Ecotourism and Sustainable Development in Costa Rica. University Press: Virginia Tech.

Fennell, D. (2003). Ecotourism (2nd ed.) New York: Routledge.

Honey, M. (1999). Ecotourism and Sustainable Development: Who Owns Paradise? Island Press: Washington DC.

Pederson, A., (2002). Managing Tourism at World Heritage Sites: A Practical Manual for World Heritage Site Managers. UNESCO.

Sri Lanka Tourism Authority (2016). Annual Statistical Report 2016 [online]. Available from http://www.sltda.lk/statistics [Accessed on 13/08/2017].

The International Ecotourism Society (2017). (1) What is ecotourism? [Online]. Available from: http://www.ecotourism.org/index2.php?what-is-ecotourism[Accessed on 14th August 2017].

World Travel & Tourism Council (2017). Travel & Tourism: Global Economic Impacts & Issues 2017 [Online] Available from https://www.wttc.org/-/media/files/reports/economic-impact-research/2017-documents/global-economic-impact-and-issues-2017.pdf[Accessed on 20/12/2017]